
# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை 14

[உறுப்பினர்களுக்கு மட்டும்] இ. ம. இ. பதிவு எண்: 135/83
வெளியீடு—: 26—2—85



தமிழினத்திற்காகவும், தமிழ்நாட்டிற்காவும் கடைசிவரைப் போராடிய தந்தைப் பெரியார் ஈ. வெ. ரா. வின் சீடர் என்று பிதற்றும் பி. சி. கணேசன் தன்மானத்தோடு தான் எழுதினாரா?

இராமலிக்க அடிகளாரை 'மூளை இல்லையென்றும், ஆண்மைக் குறையுள்ளவரென்றும்' குறிப்பிடுகின்றாரே! இதுதான்உண்மையா? அல்லது ஆராய்ச்சி என்பது அலித்தன்மையைக் கண்டு பிடிப்பதா?

பல்லாயிரம் அருட்பாக்களைப் பாடிய வள்ளலாரின் கருத்துக்களை ஆராய்வது ஆராய்ச்சியா? அல்லது முதலிரவில் என்ன செய்தார்? என்பது ஆராய்ச்சியா?

*தமிழன் அருளாளராகப் பிறந்து விட்டான்! என்ற பொறாமையா? எரிச்சலா? தன்மானமற்றத் தன்மையா?*

*உங்கள் சாதிகளில் மதத் தலைவன் இல்லையென்பதால்தான் வள்ளலாரை தலைவனாக்கிக் கொண்டீர்களா? அப்படியென்றால் வள்ளலார் பாடியது திருவருட்பாதான் என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவாயிற்று?*

*மண், பெண், பொன் துறந்து வாழ்வதுதான் ஞான சித்தர்கள், வள்ளலாரின் வாழ்க்கையை உணராத அற்பன் அவரை சந்தேகப் பிராணி-என்று கேவலமாக எழுதியுள்ளானே! இதே காரணத்தில்தான் இராமகிருட்ண பரமஅம்சர் தன் மனைவியான சாரதா தேவியாரை ஒதுக்கி வைத்தாரா! வள்ளலார் ஒரு தமிழன் என்பதாலா? தமிழனுக்கு நாதி இல்லை என்பதாலா?*

## அருள்மிகு வடலூர் இராமலிங்க அடிகளார்

# சிறப்பு மலர்

# விநாயகர் - பிள்ளையார் ≠ கணபதி

கடந்த அறிக்கையில் ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி நன்னாள் கணபதிக்குரியது என்று அறிந்தீர்கள் அதேபோல் சித்திரைமாத வளர்பிறைச் சதுர்த்தி நாளை பிள்ளையாருக்கு புத்துயிர்ப்பு நாளாக பிறப்பு நாளாக அருளாட்சி நாளாக அறிவித்திருக்கிறார்கள்

இதேபோல் தைமாத வளர்பிறைச் சதுர்த்தி நன்னாளை விநாயகருக்கு உரிய புத்துயிர்ப்பு நன்னாளாக அறிவித்திருக்கிறார்கள் இதுபற்றிய தெளிவான குறிப்புக்கள் கிடைக்கவில்லை

"...யானைத் தலையும் மனித உடம்பும் உடைய பிள்ளையார் சமணர்களாலும் புத்தர்களாலும்கூட வழிபடப் படுகிறார் இந்து மதங்களின் செல்வாக்குடைய திபெத், பர்மா, சாவா [Jawa] இந்தோ-சீன சப்பான் (Japan) முதலிய நாடுகளில்லெல்லாம் வழிபடப்படுகிறது. ஆனால் இவர்கள் பிள்ளையார் வேறு கணபதி வேறு ..... என்று பிரித்துணர முடியாமல் வழிபடுவதால் உரிய பயனைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றார்கள்

இது வடஆரியரின் சூழ்ச்சியாலும் சதியாலும் வஞ்சகத்தாலும் செத்துப் போன சமசுக்கிருதத்தாலும் விளைந்த விளைவேயாகும். வட ஆரியர்களின் பேரழிவில்தான் இந்துமத மறுமலர்ச்சியும் அருளுலகின் இருளகற்றப் படுதலும் மதத்துறையின் ஏமாற்றுக்களும் அகற்றப்படுதலும் நிகழ்ந்திடமுடியும் என்பதால்தான் வடஆரியர்களை எதிர்க்கும் பணி நிதானத்துடனும் கூர்மையுடனும் நேர்மையுடனும் நிகழ்த்தப்படுகின்றன.

ஆதிகாலத்தில் அதாவது கிரேதாயுகத்தில் வாழ்ந்த சிவபெருமான்களில் ஒரு சிவபெருமான் திரிபுரம் எரிக்கச் சென்றபொழுது கணபதியை வழிபட்டுவிட்டுச் செல்லவில்லை என்பதற்காக அக்கால கணபதி சிவபெருமானின் தேர்ச் சக்கரத்தை முறித்துப் பாடம் புகட்டித் தன்னை வழிபடும்படிச் செய்தார் என்பதால் இந்தக் கணபதி சிவபெருமானும் வணங்கி வழிபாடு செய்யுமளவுக்கு பேராற்றல் படைத்த கடவுளாக இருப்பவர் என்ற பேருண்மை விளங்குகிறது.

---

## கோயில்களைப் பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்புவதற்கு வருந்துகிறோம்

'இந்துமதம் அழைக்கிறது' ஆன்மீக மாத இதழ் மார்ச்சு மாதம் — தஞ்சை புன்னை நல்லூர் ஸ்ரீ மாரியம்மன் — என்ற கட்டுரை (பக்கம் 25 - 29)

*தஞ்சை புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில் கி. பி 1680 இல் தஞ்சையை ஆண்டு வந்த வெங்கோஜி என்ற ஏகோஜி மன்னரால் தான் உருவாக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது.*

பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி (கி.மு 100 - கி பி 150 இவர் திருச்சி மாவட்டக் கரூர்பசுபதீசுவரர் ஆலய நிலவறையில் அருவுருவமாக நிறைந்துள்ளார்) சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் மிகத் தெளிவாக குருபாரம்பரியத்தில்

...... மதுரை மூதூர் எரியுண்டதால் அதன் காவல் தெய்வங்களாக இருந்த காளி தேவியார் எண்மரும் வெளிப்பட்டு உலகெல்லாம் சென்று அருட்கோட்டம் கண்டது போல்; பூம்புகாரின் அழிவால் அதன் காவல் தெய்வங்களாக இருந்த மாரி தேவியார் ஒன்பதின்மரும் வெளிப்பட்டு உலகெல்லாம் சென்று அருட் கோட்டம் கண்டனர்.

மீண்டும் திங்களங்குலத்துப் பாண்டியப் பேரரசுமலருவது அரிதென்பது போல் கொல்லி மலைச்செறுவாச்சியூர் மருதக்காளியும்; தொட்டியம் மருதக்காளியும் அன்றி பிறரின் இருப்பிடம் அறிய முடியவில்லை. ஆனால் சூரியகுலத்துச் சோழப் பேரரசு மீண்டும் மலருவது இயலுமென்பதுபோல் சித்தர் மகள்கள் சமயபுரத்திலும்: நார்த்தா மலையிலும் திருவப்பூரிலும் புன்னை நல்லூரிலும் அருட்கோட்டம் கண்டார்கள்.

முப்பத்தாறுண்டு மூத்தவள் சமயபுரத்திலும்பதினான்காண்டுக்கடைக்குட்டிபுன்னை நல்லூரிலும் அருட்கோட்டம் கண்டது அருட்பேரரசுகளின் மலர்ச்சிக்கும் வளவளர்ச்சிக்கும் உறுதுணையே ......" என்று குறிக்கிறார்.

—எனவே தஞ்சை புன்னை நல்லூர் மாரியம்மன் கோவில் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. மேற்கண்ட கருத்துக்கள் யாவும் உண்மைக்கு புறம்பாகவும் மாறானவைகளாகவும் இருக்கின்றன.

# அருட்பா வழங்கிய வள்ளல் பெருமானை பாதுகாக்க விடுக்கும் வேண்டுகோள்

[ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் கருவூரார்]

அருளுலக இருளகலட்டும்! அருளுலக மாயைகள் நீங்கட்டும்! அருளுலக ஏமாற்றுக்கள் அகற்றப்படட்டும்! அருளுலக சுரண்டல்கள் தடுக்கப்படட்டும்! அருளுலக முதலாளித்துவங்கள் ஒழிக்கப்படட்டும்!

தன்மான உணர்வு பெற்றிடுக!
தன்னம்பிக்கை உணர்வு வளர்த்திடுக!
இனவிடுதலை உணர்வு பேணிடுக
மொழியுரிமை உணர்வு காத்திடுக!
நாட்டுப் பற்றுணர்வு போற்றிடுக!
தாய்மொழித் தூய்மை காத்தலே உய்வுக்குரிய வழியென உணர்க!
தாய்மொழிவழி அனைத்தும் நடத்தலே உரிமை பெறும் நெறியென உணர்க!

இந்து மதத்தில் வாழையடி வாழையென வாழ்ந்துவரும் அருளூறு வாசகங்களில் சிலவற்றை எடுத்துக்கூறித் தென்னார்க்காடு மாவட்ட வள்ளல் ஞானசித்தர் மெய்ஞ்ஞானத் திருச்சபை எழுந்தருளும் இராமலிங்க அடிகளாரின் தைப்பூசவிழாவில் அருளுலக இருளகற்றும் பணி அழைப்புத் திருவோலை வழங்குகிறோம்.

இன்றைய நிலையில், 'காதல்மோகினி' என்ற மாத இதழின் 1985ம் ஆண்டுச் சனவரி இதழில்; ஆசிரியர் பி. சி. கணேசன் அவர்கள்; (29 முதல் 31ஆம் பக்கம் முடிய) வெளியிட்டுள்ள 'பெண்மை தரும்பேரின்பம் 5' என்ற கட்டுரையில் நமது அருட்பெருஞ்சோதி வடலூர் வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளாரைப் பற்றி மிகமிகக் கேவலமாக, அநாகரிகமாக, அசிங்கமாக, ஆபாசமாகத்தாக்கி விமர்சித்துள்ளார். தைமாத முழுநிலவுப் பூசத் திருநாளில் பல நூறுயிரக்கணக்கான தமிழர்கள் வடலூருக்கே வந்து வழிபட்டும்; பெரும்பாலான தமிழர்கள் தங்கள் தங்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் வழிபட்டும் மரியாதை செலுத்தும் தமிழின அருளாளர், ஞானசித்தர், அருட்பா வழங்கிய அருட்கொடை வள்ளல், அருட்பெருஞ்சோதி ஆண்டவர், வடலூர் மெய்ஞ்ஞானத் திருச்சபை எழுந்தருளும் அருட்பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகளார் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலத்தை, கேவலத்தை, பழியை, இழிவைப் போக்கிட இனியாவது தன்மானமுள்ள தன்னம்பிக்கையுள்ளத் தமிழர்கள் முயலட்டும்! முயலட்டும்!! முயலட்டும்!!!

இந்துமதத் தலைவர்களை இழித்தும் பழித்தும் பகைத்தும் நகைத்தும் பேசியோ, எழுதியோ செயல்படக்கூடிய எவராக இருந்தாலும் அவர்களை முறைப்படி முயன்று முழுமையாகத் திருத்தும் தரம், .........இந்துமதத்தின் கருவறையாகவும் கருவூலமாகவும் இருக்கின்ற தமிழினத்தில் பிறந்தேயாக வேண்டும் இனியும் அருளுலகத்தார் செத்தாரே போலிருக்க வேண்டாம்! வேண்டாம்! வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

வாழையடி வாழையென அருட்பாரம்பரியத்தில் தோன்றிய அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளாருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள இழிநிலையும் பழிநிலையும் அனைத்து மதப் பத்தர்களுக்கும் இழைக்கப் பட்டுள்ள அவமானமே! கேவலமே! அநீதியே! கொடுமையே!.....இதைத் தெரிந்து புரிந்து உணர்ந்து......ஆவன செய்யுமாறு அருளுலக ஆர்வலர்களையும் நம்பிக்கையுள்ளவர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

திருவுள ஒப்புதல் பெற்ற அறிவிக்கை! பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் 'அருளுரை' 'அறிவுரை' 'அருளார்ந்த அறிவுரை' அறிவார்ந்த அருளுரை என்ற நான்கு வகை உரைகளின் சாரமாக இந்த அறிவிக்கை வழங்கப்படுகிறது.

# நால்வர் அருட்பணி தோல்வியா? வெற்றியா?

**[செயற்குழுவின் கருத்தாய்வு]**

நமது ஞானச்சாரியார். ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் நாத்திகத்தின் பெயரா லும் பகுத்தறிவின் பெயராலும் இந்துமதத் தத்துவங்களோ, தலைவர்களோ, அருளா ளர்களோ ...... கேவலப்படுத்தப்பட்டால் உடனுக்குடன் தக்க விளக்கங்களை வழங்கிட வேண்டியது இ. ம. இ. யின் கடமை என்ற கொள்கையில் கண்ணுங் கருத்து மாய் உள்ளார் இதன்படி அண்மையில் 'காதல் மோகினி [1985 சனவரி மாத இதழ்] என்ற இதழில் வடலூர் அருட்கொடை வள்ளல் பெருமான் அருட்பெருஞ் சோதி இராமலிங்க அடிகளார் மிக மிகத் தரக்குறைவாக விமர்சிக்கப் பட்டதைக் கண்டித்து ஒரு சிறிய நூலும் [விலை 1-00] ஓர் அறிக்கையும் [விலை 10-காசு] தயாரிக்கப்பட்டன ஆனால், பொருளாதாரப் பற்றுக் குறையாலும், அச்சகத்தின் இயலாமையாலும் அவசர அவசியமாகப் பத்தாயிரம் (10,000) அறிக்கை நகல்கள் 'வள்ளலாரைப் 'பாது காக்க அருளுக அழைப்புத் தருவாரை' [ஆறுபக்க அளவுடையது] அச்சிடப்பட்டது.

இந்து மதத்தில் 'நான்கு' என்ற எண் சிறப்பிடம் பெறுவது போல் சமயக்குரவர் அருளுலகத்தார் திருவுளப்படி தலைமைப் பணியாளர் சோ இரவீந்திரன் தலைமை அலுவலக இருப்பாளர் ந சண்முகம், தலைமைச் சத்தி நிலைய அமைப்பாளர் து. சுப்பிரமணியம், காரனேடை அடியான் நாகேசுவரன் எனும் நால்வரும் வடலூர் சென்று மூன்று நாட்கள் தங்கித் தமிழகமுழுதுமிருந்து வந்திருந்த அருட்பெருஞ்சோதி வள்ளல் பெருமானின் சன்மார்க்க சங்க அமைப்புகளுக்கு புகழ்மிக்க தலைவர்களுக்கு அருட்பா பாடிய தொண்டர்களுக்கும் வள்ளல் பெருமானை வணங்கும் பத்தர்களுக்கும் நேரிலேயே அறிக்கைகளை வழங்கினர்கள். ஆயிரத்துக்கும் குறைவான அறிக்கைகளே 10 காசு விலைகொடுத்து வாங்கப்பட்டன

தமிழ் மொழியில் வெளிவரும் அனைத்து நாளேடுகளுக்கும், வார ஏடுகளுக்கும், திங்கள் இதழ்களுக்கும் ...... தமிழகத்துச் சமய, சமுதாய. அரசியல், கலை, இலக்கியத்துறைத் தலைவர்களுக்கும். கல்வி நிலையங்களுக்கும், பெருமுயற்சி எடுத்து விரைந்து 'வள்ளலாரைப் பாதுகாக்க அருளுக அழைப்புத் தருவாரை' என்ற அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டது.

இந்த அறிக்கை 'நமது குருதேவர் ஏடு பதினன்கு அச்சாகி வெளிவரும் வரை தமிழர்கள் தன்மான உணர்வாலோ, இனப் பற்றுலோ, மொழிவெறியாலோ பத்தியாலோ. சன்மார்க்க சங்க எண்ணத்தாலோ நமது இ ம, இயின் கொள்கைப்படி தலைவரின் கட்டளைக் கேற்ப நால்வர் விரிந்தும், விரைந்தும் சுறுசுறுப்பாக வடலூர்வரை சென்று ஆற்றிய அருளுலக இருளகற்றும் அறிவுப்பணிக்கு நன்றி தெரிவித்தோ! பாராட்டு வழங்கியோ ஓர் அஞ்சல் அட்டை கூடவரவில்லை! வரவில்லை! வரவில்லை

வடலூர் வள்ளல் பெருமான் தமிழினத்தில் பிறந்த குற்றத்துக்காக யார் வேண்டுமானலும் எப்படி வேண்டுமானலும் தரக்குறைவாகத் திட்டி விமர்சனம் செய்யலாமென்ற இழிநிலையும், பழிநிலையும் இருப்பது பற்றி எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

வள்ளல் பெருமான் அமிழ்தினுமினிய அருட்கவிகளைத் தமிழ்மொழியில் பாடிய காரணத்தால் மொழிப் பற்றே! மொழியுணர்வோ! மொழியுரிமை வேட்கையோ! ...............இல்லாத தமிழர்கள் அவரைக் காக்கும் உணர்வற்றிருப்பதால் தான் தமிழ் மொழியில் தோன்றிய அருட்கவியான இராமலிங்க அடிகளார் கண்டபடி தாக்கப்பட்டும் தடுக்கப்படாத! கண்டிக்கப்படாத இழிநிலை நிலவுகிறது என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது

இந்து மதமென்பது சமசுக்கிருத மொழியில்தான் இருக்கிறது என்ற உணர்வாலும் பிறமண்ணினரான பிருமணரின் வேதமதமே இந்து மதமென்ற நினைவாலும்! வேத மதத தலைவர்களே இந்துமதத் தலைவர்கள்

என்ற நம்பிக்கையாலும்தான்......... இன்றைய இந்துக்கள் தமிழனான அருட்பெருஞ் சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளார் பழிக்கப்பட்டதை இந்து மதத்துக்கு ஏற்பட்டிட்ட எதிர்ப்பாக! துரோகமாக! விரோதமாக! இழிவாக.... ...எண்ணி இந்துமதத் தலைவர்களோ, மடாதிபதிகளோ, பீடாதிபதிகளோ! ஆச்சாரியார்களோ! பத்தர்களோ, பத்திரிக்கை எழுத்தாளர்களோ! கொதிக்கவில்லை! கண்டனக்குரல் எழுப்பவில்லை...... இது பற்றி எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது. வடலூர் வள்ளல் பெருமானின் அருட் பட்டங்களை அச்சிட்டு இலட்சம் இலட்சமாகச் சம்பாதிப்பவர்கள் சிலர்; வடலூராரின் புகழைப் பரப்பிக் கோடி கோடியாகப் புரட்டுபவர்கள் சிலர்; வள்ளலாரைப் பற்றியப் புத்தகங்கள் எழுதியே பணம், புகழ், பட்டம், பதவி பெற்று வாழ்பவர் பலர்; வள்ளலாருக்காகவே தங்கள் வாழ்வை முழுமையாகக் காணிக்கையாக்கித் தொண்டு புரியும் தொண்டர்கள் எண்ணற்றோர்; வள்ளலாரின் அமுதப்பாடல்களைப் பாடி மெய்மறந்து உலகியலைத் துறந்து வார வழிபாட்டு மன்றங்களும், சங்கங்களும் இயக்கிச் சன்மார்க்கப் பணிபுரிவோர் பலர்; தங்களையே வள்ளலார் போன்று வெள்ளாடைத் தவக் கோலத்துக்குள்ளாக்கி அடியார்களாக வாழ்வோர் கணிசமானவர்கள் என்ற வளமான நிலை நம் நாட்டில் இருந்தும்; வள்ளலாரைப் பாதுகாக்க அருளுலக அழைப்புத்தருவாணை' என்ற அறிக்கை வழங்கிப் பல நாட்களாகியும் பதிலே இல்லாததற்குக் காரணம்என்னவென்று எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

'நாம் எவ்வளவுதான் எண்ணிப் பார்த்தாலும்; நமக்குத் தெரிவதெல்லாம், ஒரே கண்ணோட்டக் காரணம்தான்: அதாவது, பலநூற்றாண்டுகளாக உண்மையான தமிழின உணர்வோ! தமிழ் மொழியுணர்வோ! தமிழ்நாட்டுணர்வோ! தன்மான உணர்வோ! தன்னம்பிக்கையோ............ உள்ளவர் ஒருவர் கூடத் தமிழர்களுக்குத் தலைவர்களாகக் கிடைக்கவில்லை. என்ற கருத்தேயாகும் - மேலும் தமிழினத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் கூலிகளாக, கருங்காலிகளாக, போலிகளாக, கோழைகளாக, தன்னல வெறியர்களாக வாழ்ந்து தமிழினத்துக்கும், மொழிக்கும், நாட்டு நலன்களுக்குத், துரோகிகளாகவும் விரோதிகளாகவுமே செயல்பட்டுச் சென்றிட்டார்கள் என்ற இப் பேருண்மைகளின் வரலாற்றில் தமிழரல்லாத தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. ஒருவர் தான் தன்னலமின்றி தன்னம்பிக்கையோடு சிங்கமெனச் செயலாற்றியவர். ஆனால், அவர், தமிழரல்ல என்பதாலும்; நாத்திகக் கண்ணோட்டத்தில் அதிர்ச்சி மருத்துவமாகச் சீர்திருத்தப் பணிகளைச் செய்ததாலும்; தமிழ் மொழியைப் பற்றிய முழுமையான பின்னணியில் செயல்படாததாலும்......... அவரது பணிகள் எதிர்பார்த்த அளவு பயனளிக்கவில்லை எனவே தான், தமிழ் மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு; தமிழரின் சமயத்தத்துவம்...... முதலியவையே முழுமையான வடிவமைப்பாகவும் செயல் திட்டமாகவும் உடைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தொண்டும், துணையும், வழிகாட்டலும். வழித்துணையும் தான் உடனடியாகத் தமிழர்களுக்குத் தேவை! தேவை! தேவை!

நமது இயக்கம் மாபெரும் தத்துவ அடிப்படையையும், வரலாற்றுப் பின்னணியையும் செயல் திட்டச் சித்தாந்த உயிரோட்டத்தையும் உடைய ஒன்று ..னவே! தமிழினம் ஒற்றுமை பட்டிட! தமிழ்மொழி அரியணையேறிட! தமிழினம் விடுதலை பெற்றிட! தமிழர் தன்மான உணர்வு பிழைத்திட! தமிழ் மொழிப்பற்று தழைத்திட! தமிழ் சமுதாயம் உயர்வும் உய்வும் பெற்றிட...... இந்து மறுமலர்ச்சி இயக்கம் தான் பொறுப்பேற்று பணியாற்ற வேண்டும். தமிழினம் அனுதையாக இழிவையும், பழியையும், சீரழிவையும்.......... பெறுவதைத் தடுத்திட நம்மை விட்டால் வேறு நாதியில்லை. இதையே நால்வர் பணியின் விளைவுகள் விளக்குகின்றன.

---

# அன்புள்ள சேவகனுக்கு..............!

அன்புச் சேவக !

யாம் சாதாரணச் சித்திகளைப் பெற்ற அருளாளர்களைப் போல் ஒரிடத்திலமர்ந்துகொண்டு எம்மைக் காணவருகிறவர்களை எம்முடைய அருள் எல்லைக்குள் கொண்டு வந்து அவர்களுடைய அக புற போராட்டங்கள் தற்காலிகமாக அமைதியடையும்படிச் செய்து செயல்பட்டிட்டால் இந்நேரம் உலகம் முழுவதும் எமக்கென ஒரு பெரிய மாபெரும் கூட்டத்தையும் எண்ணற்ற அமைப்புக்களையும் பெற்றிருக்க முடியும். ஆனால், யாம் அப்படிப்பட்ட மாயா நிலைச் செயல் புரிந்து எம்மை மட்டும் வளர்த்துக் கொள்ள விரும்பியதே இல்லை. தொடர்ச்சி 11-ம் பக்கம்

# கேள்வியும் நானே! பதிலும் நானே!

**1.** வள்ளலாரைப் பழித்துரைத்து எழுதிய-போது கொதித்தெழுந்த தாங்கள் அவரின் கொள்கைக்கு அதாவது உயிர்ப்பலிகூடாது என்ற கருத்துக்குப் புறம்பாகச் செயல்படுவது ஏன்? உயிர்களைக் கொல்வது பெரும் பாவமல்லவா?

உயிர்ப்பலி தேவையானதா? அவசிய? மானதா? இதுபற்றி தங்களின் விளக்கமென்ன-

பதில் i. வள்ளலாரைப் பழித்தபோது கொதித்-தெழுந்ததற்குப் பலகாரணங்கள் உண்டு ஒன்று, அவர் இம்மண்ணுலகில் தோன்றிட்ட 48 வகையான அருளாளர்களில் மண்ணையும் பெண்ணை-யும் பொன்னையும் வெறுக்கும், ஞானசித்தர் வகையில் தோன்றி; இந்த ஞானசித்தர்களின் பட்டியலில் எவருமே வாழாத மிகப்பெரிய அரிய சீரிய நேரிய அருள் வாழ்வு வாழ்ந்துகாட்டியவர் இரண்டாவது வேதாகமங்கள் சாத்திரங்கள் சாதிசமயக்கோத்திரச் சண்டைகள் முதலிய வட ஆரியத் தீமைகளை ஏமாற்றுக்களை மாயைகளை தெளிவாகவும் நேரடியாகவும் கண்டித்-தவர். மூன்றாவதாக பத்திநெறியில் உள்ளவர்களுக்கு உணர்வு, மனம், சிந்தை, உடல் முதலியவைப்படிப்படியாக அமைதி பெற்றுப் பக்குவப்படுவதற்குறிய மந்திரங்களாகவே பல்லாயிரக் கணக்கான இனிமைமிக்க அருட்பாக்களைப் பாடியவர்.

நான்காவதாக இவர் ஒருவர்தான் தமக்கேற்பட்ட தோல்வியைப்பணிவாக வெளிப் படையாக ஒப்புக்கொண்டு ''கடைவிரித்தோம் கொள்வாரில்லை நிற்போர் நிற்க யாம் ஏகுகிறோம்'' என்று கூறியவர். ஐந்தவதாக தமிழினம் பெரு-மைப்படும் அளவிற்கு அண்மைக் காலத்தில் வாழ்ந்து சென்ற மிகப்பெரிய அருளாளரே இவர். ஆறுவதாக இவர்''சித்தர் வருகின்ற தருணமிது வரம் பெறலாம் நீவீர்'' என்று சிறப்பாகப் பதினெண் சித்தர் பீடாதிபதியின் வருகையை உலகுக்கு அறிவித்தவர். ஏழாவதாக இந்துமத வழிபாட்டு நிலையங்களின் செயலற்ற பயனற்ற தன்மைகளைக் கண்டு அனுவசியமாகப் போரா-டாமல் புதிய வகையான ''சன்மார்க்க சங்கத்-தை'',அருள்ஞானத் திருச்சபையை,அருட்பெருஞ் சோதி வழிபாட்டு மன்றத்தை உருவாக்கினார் ... இப்படி எண்ணற்றக் காரணங்களைக் கூறலாம்.

ii. தங்களுடைய வினாவில் பலியிட்டு இறைச்சியுணவைப் படைத்து வழிபடுவது சரியா என்று கேட்டிருக்கிறீர்கள். பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமத்தின் அடிப்படையும் உள்ளீடும் முடிவும் பலிகள் கொடுத்துத்தான் பூசைகளைத் துவக்கவேண்டும். இறைச்சியுண-வுப் படையலைப் படைத்துத்தான் பூசைகளை நிறைவுசெய்ய வேண்டும் என்ற முறையான சட்டதிட்டசெயல்நிலை உள்ளது. இதனை மாறி-யும் மீறியும் மறந்தும்துறந்தும் மறுத்தும்வெறுத்தும் செயல்பட்டிட்டதால்தான் இந்துமத வழிபாட்டு-நிலையங்கள் அனைத்தும் பாழடைந்தன பயனிழந்து நின்றன என்ற பேருண்மையினைப் பத்தாவது பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களது குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கியம் ...... முதலியவற்றில் மிகத்தெளிவாகக் குறிக்கின்றார்கள்

இறைச்சியுணவு உண்ணாதவனுக்கு முத்தி கிடை-யாதென்றும் அவன் மறுபிறப்பில் உலர்ந்த எலும்புத்துண்டுகளைக்கடித்து தன் பசியடங்காது திரியும் சொறிபிடித்த தெருநாயாகப் பிறந்து துன்புறுவான் என்ற கண்டிப்பும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால்வெளியிடப்பட்டுள்ளது இதில் விதிவிலக்கு பெறுபவர்கள் ஞானசித்தர்-கள் மட்டுமே என்ற குறிப்பு இருப்பதால்தான் ஞானசித்தராகிய இராமலிங்க அடிகளாரைப் போற்றுகிறோம் ஆனால் அவர் கூறிய 'பலிமறுத்-தல்' 'புலால் உண்ணாமை' ஆகிய இரண்டு கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் மறுக்கிறோம் எதிர்க்கிறோம். விரைவில் வடலூரி-லேயே புறா, சேவல், ஆடு, மீன் முதலியவைப் பலியிட்டுப் பொங்கலிட்டுப் படையலிட்டு அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளாரை பதினெண்சித்தர் முறைப்படி வழிபாடுசெய்யப் போகிறோம். இதுவே எங்களுடைய அடுத்த செயல்திட்டகட்டம்

iii. தங்களது வினாவில் உயிர்க்கொல்வது பாவமல்லவா என்று வினவியிருக்கிறீர்கள். பதினெண்சித்தர்களின் உண்மையான இந்து மதப்படி உயிர் அழியாதது அதை யாரும் கொல்ல முடியாது அது எண்ணற்றப்பிறப்புக்களை எடுத்து ஆவியோடும் ஆன்மாவோடும் ஒன்றி முச்சித்தி நிலையை பெற்று இயற்கையோடு கலக்கும் அதாவது அணுக்களாகப் பிரிந்து கலக்கும் எனவே உயிர் கொலை என்பதற்கு இடமில்லை இந்தச்சொல்லே பொருளற்றது.

iv பதினெண் சித்தர்கள் அருளுலக பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்கினையும் பெறுவதற்குரியப் பூசைப்பொருளே இம்மண்ணுலகிலுள்ளப் பயிரினங்களும் உயிரினங்களும் என்று மிகத்தெளிவாக விளக்கமாக ஆணையிட்டுக் கூறுகிறார்கள் இதனை

''பொன்னுக்கும் ஓட்டுக்கும் மாறுபாடுகருதாதே
புலாலுக்கும்பயிருணவிற்கும்வேறுபாடுகருதாதே
குருவுக்கும் திருவுக்கும் முரண்பாடுகொள்ளாதே
அனைத்தும் இணைத்து ஒன்றென உணர்வதே
ஞானம்''

என்ற குருவாக்கியம் மிகத் தெளிவாக மேற்சொன்னக் கருத்தை விளக்குகிறது.

# பதினெண் சித்தர் திருவாசகம்

## [காவிரியாற்றங்கரைக்கருவூரின் குருபாரம்பரியம்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

சாத்திரச் சம்பந்தனுணையால் பாண்டியனுக்கு நோயாயிற்று
ஆத்திறச் சமணரின் அரும்பாடு வெப்பகற்றவில்லை
சூத்திரச் சமணரின் சமசுக்கிருதம் செத்தது புரிந்தது
தோத்திரச் சம்பந்தனின் அமுதத் தமிழ் வென்று நின்றது
பாராளும் வேந்தன் பாதியுடல் வெப்பால் பதைத்தது
போரிட்ட சமணரை வெகுண்டே சம்பந்தன் அடிபணிந்து
நீரிட்டவுடனே எரிச்சல் தணிந்து நேருற்றான் பாண்டியன்
மீறிட்ட சமணரோடு சம்பந்தனைப் போரிட வேண்டினான்
யாரிட்ட சாபமந்த வெப்பு நோ யென்பதற்கே விளக்கம்
கோரிட்ட குலச்சிறை மங்கையர்க்கரசி விடை பெறவே
தமிழால் இறையாற்றல் நிலை நாட்டி விளக்கிட
தமிழந்தணன் சமசுக்கிருதப் பிணநிலை மெய்ப்பித்தான்
விரிசடைக் கடவுளின் நமச்சிவாய நற்றமிழ்
எரிதழலில் பனையேட்டில் பொறிட்டிடச் சாமங்கள்
விரைந்தோடியும் சாம்பலாகா நிலைகண்டே வெட்கினர்
தேரை மொழிச் சமசுக்கிருத எண்ணாயிரச் சமணர்
தவறய்யம் போக்கவே தமிழ்முனி திருஞானசம்பந்தன்
தழலில் தளிர் நடையிட்டுத் தண்டமிழ் ஏடெடுத்து
அனல் வாதம் வென்ற கன்னித்தமிழ்ப் பனையேட்டை
அமணர் காணவே கடவுளுணர்ந்த பாண்டியன்
தண்டமிழ் திருக்கரத்தில் வழங்கினான் திருஞானசம்பந்தன்
கண்டதை விண்டுணர முடியாக் கருத்தழிவில்
மாண்டிடத் துடித்த அமணர் புனல் வாதம் நாடினர்
ஆடிப் பெருவெள்ளம் அமணர்க்கு நல்ல வெற்றியே
தேடித்தருமென அனைவரும் எண்ணியே கலங்கிட
சூடிய பிறையோன் குலத்து ஏந்தரீகம் தாந்தரீகம்
நேம நியம நிடத நிட்டை சுருதியாரண ஆகமமீமாம்சை
பத்தினும் வல்லியாய்த் திருஞான சம்பந்தன்
சூரிய குலத்து ஓம ஓக யாக யக்ஞ வேள்வித்தவ
ஞான மாந்தரீக எட்டு வல்லைகளையும் போற்றியே
அண்ட பேரண்டமாளும் கடவுட்டமிழை எழுதிய பனையேட்டை
படகோரும் கரையோரப் பரியோரும் காணவே
வைய மைய மண்டபத்துப் படி தவழ் நீரில் விட்டான்
பொய்யாத் தெய்வத் தமிழந்தணன் மகன்
திருஞான சம்பந்தன் போற்றி வாசகம் வாக்கு முழக்கியே
அருளுலக இருளகற்றும் திருவிழாவே நிகழ்ந்ததன்று
நீருள் மூழ்கிய ஏடுகண்டு கொக்கரித்த சமணர்
வீரிட்டலற விரைந்தே வெளிப்போந்த தமிழேடு
நேரிட்டனைவரும் காண ஆற்று நீரை எதிர்த்தது
போரிடப் புறப்பட்ட அம்பெனத் தமிழ்முனியின் ஏடு
பரியோரும் படகோரும் தொடரத் திருவேடகம்

*[வளரும்]*

# இலக்கியப் பாரம்பரியம்

14. இலக்கிய மென்பது குடும்பப் பற்றும் பாசமும் உலகியல் ஈடுபாடுமுடைய நளின மெலின வலினப் பண்புகளை யுடைய முழுமையான மனிதனை உருவாக்குவதாக இருக்க வேண்டும்.

15. இலக்கிய மென்பது தன்மானப் பிடிப்புடனும் தன்னம்பிக்கையுடன் பொறுப்பான வாழ்க்கை வாழும் மனிதனை உருவாக்குவதாக இருக்க வேண்டும்.

16. இலக்கிய மென்பது கனிவும் துணிவும் இனிமையும் பணிவும் அருளும் இரக்கமும் நிறைந்த அந்தணாளர்களையும் உருவாக்கும் ஆற்றலுடையதாக இருக்க வேண்டும்.

17. இலக்கிய மென்பது தத்துவ விதைகளை *நாலாவித [நாலு வகை - பாட வேறுபாடு*] மனிதர்களுக்கும் உரியதாகச் செய்யும் வண்ணம் கதை. காதை, *காவியம் [கவிதை - பாட வேறுபாடு*] கீதை என்று நான்கு வகையிலும் வழங்குவதேயாகும்.

18. இலக்கிய மென்பது குறைந்த கல்வி யுடையவர்களையும் நிறைந்த அறிவுடையவர்களாக்கிட உதவிட வேண்டும்.

19. இலக்கிய மென்பது தன்மானமும் நாட்டு மானமும் பேணுதற்குப் பேருதவி புரிதல் வேண்டும்.

20. இலக்கிய மென்பது இழிந்த உணர்வுகளின் ஆட்சியால் விளையும் பழிகளையும், அழிவுகளையும், ஒழிவுகளையும் நலிவுறுத்துவதாக இருக்க வேண்டும்.

21 இலக்கிய மென்பது பிறருக்குக் கங்காணியாகவோ, கூலியாகவோ, கார்வாரியாகவோ, தரகராகவோ, அடிமையாகவோ வாழும் போக்குடையோரின் மொழி, இன. நாட்டுத் துரோகங்களையும் விரோதச் செயல்களையும் தடுப்பதாக இருக்க வேண்டும்.

22. இலக்கிய மென்பது அழகுணர்வையும், விடுதலையுணர்வையும், தனித்த பெருமித உணர்வையும், வீறுபெற்ற பீடுணர்வையும்......... உரமிட்டு வளர்ப்பதாக இருக்க வேண்டும்

23 இலக்கிய மென்பது பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுகளையும் நாகரீக அடிப்படைகளையும் அருகு போல் தழைத்தும் ஆல் போல் நிலைத்தும் நிற்கச் செய்ய வேண்டும்.

24. இலக்கிய மென்பது ஏழையைப் பணக்காரனுக்குவதைவிடக் கோழையை வீரனுக்கும் முயற்சியைச் செய்வதாக இருக்க வேண்டும்.

25. இலக்கிய மென்பது சமுதாய நல விரோதிகளையும் துரோகிகளையும் அடையாளம் காட்டி மக்களைச் சமுதாய நலப் போருக்குத் தயாரிக்கும் மாபெரும் உயிர்ச் சாதனமாகவே இருக்க வேண்டும்.

26. இலக்கிய மென்பது மதவாதிகளின் அண்டப்புளுகுகளுக்கும், ஆபாசக் கற்பனைகளுக்கும், சூழ்ச்சியான பொய்யுரைகளுக்கும் உதவியாக இருந்திடக்கூடாது.

27. இலக்கியம் என்பது இன்பமாகவே, துன்பமாகவோ, வீரமாகவோ நேரத்தைப் போக்கும் வழித்துணையாக மட்டும் இருந்திடக் கூடாது அது, வாழ்வியல் உணர்வுகள் அனைவருக்குமுரிய காரண காரியங்களை விளக்கி அனைவருக்கும் நல்வாழ்வை நல்கும் சூழலை உருவாக்குவதாக இருக்க வேண்டும்,

29. இலக்கிய மென்பது சமுதாய மரபுகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், நெறிமுறைகளையும், ஒழுகலாறுகளையும் முறையாக விளக்கி இனபபற்றையும் இன ஒற்றுமையையும் விழிப்புடையவையாகவும் செழிப்புடையவையாகவும் செயல் நிலையிலேயே வைத்திருக்க உதவ வேண்டும்

(வளரும்)

# தன்வந்திரி தரும் பாரதக் காட்சிகள்

கபாடபுரத்துக் கருவூரரின் (எட்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி) புகழ் விளங்கும் வண்ணம் அரச பரம்பரையில் வந்த குந்தி நாட்டு மன்னனான சூரசேனன் மகன் வசுதேவனுக்கும் அவனுடைய குருதித் தொடர்பான உறவினன் போசநாட்டு (போதநாடு) தலைவனான தேவன் மகள் தேவகிக்கும் எட்டாவது மகனாக ஆவணித் திங்கள் அட்டமித் திதியில் உரோகிணி மீனில் (நட்சத்திரம்) கண்ணன் — துவாபரயுகத்தை நிறைவு செய்வதற்காக திருக்களாலும் அண்ட பேரண்ட அருளாளர்களாலும் பிறந்தான். இவன் பிறந்தது முதல் இறுதி நேரம் வரை தன்னைப் பேராற்றல் மிக்க தேவகுமாரனாக, அருளாளனாக நவநாத சித்தனாக ...... ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்திட்டான்,

கண்ணன் பிறந்தவுடனேயே தன்னுடைய தாய்தந்தையருக்கு தான் ஓர் அருளுலக வாரிசு என்ற பேருண்மையினை முழுமையாகச் செயல்வடிவில் விளக்கினான். அதன் பிறகே அவர்களுக்கு ஆணையிட்டு திருஆயர்பாடியில் நந்தகோபன் மனையில் யசோதையிடம் வளர்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வளர்ந்தான். இவனுடைய தாய்மாமன் கம்சன் அவைக்களத்தில் நெடுங்காலமாக தொடர்பு கொண்ட காரணத்தினால் கம்சனுக்கும் பிறருக்கும் இவனுடைய மாய தெய்வீகப் பிறப்பினை எடுத்துக் கூறிவிளக்க முற்பட்டு தோல்வியே கண்டேன்,

தன்வந்திரி வாசகம்.

கண்ணனின் பிறப்புக் காலத்திற்கு முன்புவரை துவாபரயுகத்தில் சூரிய சந்திர குலத்தவர்கள் கூட அரக்கர்களிடம் போராடுவதற்கு பயந்து சமாதான முறையிலேயே அவர்களை பயன்படுத்தி வந்தார்கள். கம்சனிடம் நிறைய அரக்கர்கள் பணியாட்களாக இருந்தார்கள். இவர்களுக்கு தேவையான அளவுக்கு மேல் வாழ்க்கை வசதிகளையும் உரிமைகளையும் பெருமைகளையும் வழங்கியிருந்தான் எனவே அரக்கர்கள் கம்சனைப் போன்று தங்களை முழுமையாக ஆதரிக்கின்ற அரசர்களையும் ஏற்றுப் போற்றி வாழ்பவர்களாவே வாழ்ந்து வந்தார்கள் அவர்களுக்கு இறுதிக் காலம் ஆரம்பமாயிற்று

கண்ணன் பாலை உணவாகக் கொள்ளும் பாலகனாக (பால் + அகன் = பால் குடிக்கும் பருவத்தினன்) இருக்கும்போதே அரக்கர்களை அழிக்க ஆரம்பித்தான் நான் எவ்வளவோ கூறியும் கம்சன் பூதனை என்னும் அரக்கனையும், சகடன், திருணவர்த்தன் என்னும் அரக்கர்களையும் கண்ணனை அழிக்க அனுப்பி பலிகொடுத்தான் தொடர்ந்து அவனுக்குப் பிறப்பியலின்படி (கம்சனுக்கு) விரைவில் கண்ணனால் அழிவு இருக்கிறது என்று எடுத்துக் கூறினேன். ஆனால் விதி வலிமையுடையது என்பது மெய்யாகிவிட்டது. 'செத்தவர்களைக் கூட மீண்டும் உயிரோடு எழுப்பிவிடலாம் ஆனால் விதியின்படி கெட்டகாலம் உள்ளவர்களைத் திருத்தவே முடியாது. இம்மண்ணுலக அரசர்களுக்கெல்லாம் மருத்துவனான என்னிடம் கம்சனுக்கு மதிப்பு இருந்தது அதிசயம் இல்லை. கண்ணனின் தெய்வீகப் பிறப்பை கம்சன் நம்ப மறுத்ததுபோல் கௌரவர்கள் நம்ப மறுத்து அழிந்தார்கள். துரோணாச்சாரியாரும் வீடுமரும், கர்ணன் மட்டுமே கண்ணனின் அருட்சக்திகளை உணர்ந்திருந்தால் பாரதப் போரையேத் தடுத்திருக்கலாம் நான் எவ்வளவோ முயன்றும் எனக்கு ஓர் அருளாளனாகச் செயல்படும் திருவுள ஒப்புதல்கள் கிடைக்கவேயில்லை. சந்திரகுலத்தில் பிறந்த நான் இறுதிவரை ஒரு மருத்துவனாகவே வாழநேரிட்டது இது விதியின் வலிமையைக் காட்டுகிறது

தன்வன்திரி தரும் வாசகம்

(தொடரும்)

---

## தமிழா! தமிழ்

பழமை யென்றும் இளமை தானடா - தமிழா!
பசுந்தமிழை வளமையாக்குடா,
குலமகளும் நிலமகள் தாண்டா - தமிழா
குடும்பத்துடன் கலந்து வாழடா!
மக்களின் சிக்கல்களைப் போக்குடா - தமிழா
மடமைகளைச் சுக்கலாக்குடா,
துக்கங்களை உதறித்தள்ளடா - தமிழா
துறவறத்தை தூக்கில் போடுடா

—கவிமேகம் இல. க. கணேசன்

# 'குருபத்தியே சித்திக்கு வழி:'
## [தொகுத்து வழங்குபவர் பரமாச்சாரியார்]

''குருவும் திருவும் ஒன்றே''
''புறக் கண்ணாலும் அகக் கண்ணாலும்
குருவைக் கண்டுணர்க.''
''குருவருளால் கருவினை யொழியும்''
''குருவருளால் இருவினை வெல்லலாம்

...............என்பவைகளை ஆராய்ந்து, அறிந்து, தெரிந்து, புரிந்து, தெளிந்து உணர்ந்து, ஒப்புக்கொண்டு, செயல்படுத்துக என்பதே சித்தர்கள் மாணவர்க்குக்கூறும் எண்பேராயத் தத்துவம்.

நொடிப் பொழுதில் கோடிக்கலைகள் ஓடிவந்து பணிபுரியும் அணிமிகு வாழ்வு குருவின் கடைக்-கண்பார்வை ஒரு நொடி தன்மீது படப் பெற்றதாலடைவான் மாணவன் என்பது தாத்தா பதினே-ராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா-சன்னிதானம் சித்தர்காவிரியாற்றங்கரைக் கரு-ஹூரின் அருள்வாக்கு ஆகும்.

நாம் பேராசை இல்லாமல் உரியது கிடைக்-கும் வரை நம்பிக்கையோடும் பொறுமையோடும் அடக்கத்தோடும் இருந்து கற்றுப் பயன் பெறல் வேண்டும்.

'பொறாமை, அருவெறுப்பு, போட்டி, பேராசை,, ஏக்கம், ஏமாற்றம், எரிச்சல் ...... முதலிய தீய உணர்வுகள் அப்பாவி மக்களின் மனதில் புகைய ஆரம்பித்து அது பெரு நெருப்பாகி விட்டால் அதில் நீ எரிந்து சாம்பலாகிவிடுவாய்

அதனால், பிறர் கண் உன்மேல் விழாமல், பிறரின் பகை, எதிர்ப்பு, வாதம் வீண் பொல்-லாப்பு, பொறாமை ...... முதலியவை உன்மீது ஏற்பட்டு விடாமல் மிக மிக அடக்கம். அமைதி ஆரவாரம்இன்மை அதிகம் பேசாமை, பண ஆசை இன்மை, வீண் வாதம் புரியாமை அகம்பாவம் இன்மை ஆணவம் இன்மை......... ''எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல்'' என்று கூறல் ...... முதலிய பண்புகளைப்பெறுக-'' என்று அடியேனுக்கு ஞாலகுரு சித்தர் கருஹூர் குருதேவர் அவர்கள் 3-6-1975 ஆம் தேதியில் அறிவித்த அறிவுரையையே அனைத்து அடியான்-களுக்கும், அடியார்களுக்கும் அடியாள்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

உலகியலில் நமக்கு பலவகையிலும் ஏமாற்-றம் எதிர்ப்பு, ஏச்சு, பேச்சு ஏளனம் ...... என்று ஏற்படத்தான் செய்யும் ஏனென்றால் இந்த உலகில். மனிதவடிவில் தான் அரக்கர் அரக்கி-யர் இருக்கின்றனர், புராண இதிகாசகாலங்களில் அப்படியொரு தனி இனமே இருந்தது அந்த இனம் அந்தக் காலத்தில் மெய்ஞானிகளைத் தவம், பூசை, வேள்வி ...... முதலியவை செய்ய விடாமல் தடுத்துத் துன் புறுத்தியது ஆனால், இப்போது, அப்படியொரு தனி இனம் இல்லை, அதற்கு மாறாக, அந்த இனம் மனித இனத்தோடு ஐக்கியமாகி; மனித வடிவில் பிறந்து, மனிதனாக வாழ்ந்து, பழைய கெடுதல் களைத் தொடர்ந்து செய்து வருகின்றது எனவே. இதனை நமது அனைத்து நண்பர்களும் உணர்ந்து செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் ,அவர் சொன்னார்? இவர் சொன்னார்?... என்று தேவை இல்லாத கருத்துக்களையும் ஐயங்களையும்வளர்த்து பாழாகிட நேரிடும் இதனை நினைத்துத் திருவருளை ஒரு கண்ணாகவும், குருவருளை மற்றொரு கண்ணாகவும் கொண்டு தொடர்ந்து தடுமாற்றமின்றிச் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும். பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் விதி, ஊழ்வினை......... காரணமாக நாம் குருவை அடைந்துள்ளோம். குருவருளால் நாம் பத்தி, சத்தி, சித்தி, முத்தி, நிலைகளில் உயர்ந்து மெய்ஞ்ஞானிகளாகும் போது அதைத் தடுக்கும் பொருட்டு; முன்பு கூறியபடி அரக்கர், அரக்கியர் இனங்கள் நம் வீட்டுக்குள்ளேயே, நம் உற்றார் சுற்றத்தார்களுக்குள்ளேயே, ஊரார் களுக்குள்ளேயே, நெருங்கிய நண்பர்களுக்குள் ளேயே கூட இருந்து எட்டி விடாமல் தட்டித் தடுத்து விடலாம் என்பதால்; அனைவரும் குருவே கதி என்ற நல்லுணர்வைப் பெற்றுத் தொண்டாற்ற வேண்டும், அருளாளர்களின் வாழ்க்கை முழுமைபெற வேண்டுமானால் குருவின் அருள் முழுமையாகச் சித்தியாகியிருக்க வேண்டும். எனவே, குரு கூறக் கூடிய சட்ட திட்டக்கட்டுப்-பாடுகளுக்கு உட்பட்டு நம்பிப் பொறுமையோடும் பொறுப் போடும் செயலாற்ற வேண்டும், ஏனென்றால், நாம் ஒரு புரட்சிப் படையைத் தெய்வீகத் திருப்பணிகளுக்கு, இந்து மத மறுமலர்ச்சிக்கு, மொழியுரிமைக்கு, இன உரிமைக்கு ...... நன்மை செய்ய அணி செய்ய உருவாக்குகிறோம்.

புரட்சிப்படை வீரர்களும், தளபதிகளும், போர் ஒழுங்கு [Military order, Discipline, obedience, obey the order, immediate action, No word against the Commondar]

கட்டுப்பாடு, பணிவு, ஆணைக்கு உடனே கீழ்ப்படிதல், எதையும் சொன்னால் உடனுக்குடன் செயல்படல் படைத்தலைவனின் கருத்துக்கு மாறாக எதிராக ஒரு சொல் கூடச் சொல்லாமை, உடனே செயல் படல், ...... முதலிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். — "Do or Die" செய் அல்லது செத்து மடி'' என்ற சித்தாந்தம் செயலாக வேண்டும்.

தொடரும்

## அன்புள்ள சேவுகனுக்கு.......! தொடர்ச்சி

எனவேதான்யாம், இம்மண்ணுலகில் இதுகாறும் தோன்றிட்ட அனைத்து வகையான அருளாளர்களின் வாழ்வியல்களையும் சாதனைகளையும் இணைத்துப் புதுமைப்படுத்தி உலகந்தழுவிய நிலையான நன்மைகளை விளைவிக்க 'அருட்புரட்சி' முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

நிலத்திலிருந்து தங்கம் கலந்த மண்ணை வெட்டியெடுத்துக் குவிப்பதுபோல்தான் இதுவரை உலக அருளாளர்கள் அண்ட பேரண்டத்துள் புதைந்து கிடக்கும் அருட்சக்திகளை வெளிக் கொணரும் முயற்சியில் மட்டுமே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சென்று விட்டார்கள் இவர்கள் செய்யாதது தங்கத்தாதுகளை ஒன்று திரட்டி கட்டித்தங்கத்தை உருவாக்குவதும் அப்படி உருவாக்கிய தங்கத்தை உலக மக்களின் நல் வாழ்விற்குப் பயன்படும்படிச் செய்வதும் போன்று தங்களுடைய வாழ்வின் சாதனைகளை வடிவமைப்புப்படுத்தி என்றென்றும் அருட்சக்தி மக்களின் நன்மைக்கு பயன்படும்படியான செயல்திட்டத்தை வகுக்காமல் சென்றதால் இக்குறையை நிறைவு செய்யவே இவ்வியக்கத்தைத் துவக்கிச் செயல்படுகின்றோம் இதுதான் எமது தத்துவம், குறிக்கோள், சட்டதிட்டம்

அன்பு நண்ப!

அருளுலகில் மாணாக்கர்கள் குருவைத் தேடிக் கண்டுபிடித்தாலும் அக்குருவின் பின்னால்பல காலம் அலைந்து பலவாறு தொண்டுகள் புரிந்து அதன்பிறகே குருவின் அருளைப் பெறுவதென்பதே மிகப்பெரிய மரபாக இருந்து வருகின்றது. இதே நேரத்தில் அருளுலகில் ஒரு சில குருமார்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் தேடியலைந்து விரல் விட்டு எண்ணக்கூடிய சில மாணாக்கர்களை மட்டுமே உருவாக்கி அருள் வழங்கி தங்களின் நினைவாகப் புதியதொரு கூட்டத்தை உருவாக் -கிச் சென்று விடுவதும் மரபாக இருக்கின்றது.

யாம், இப்படிப்பட்ட அருளுலகில் தான் பாரம்பரியமாகப்பெற்ற அருளையும் பயிற்சிகளாலும் முயற்சிகளாலும்; கல்விக்கேள்வித் தொண்டுகளாலும்.........பெற்றிட்ட அருட்செல்வங்களையும் இப்புவிப்பரப்பின் பெரும்பாலானப் பகுதிகளுக்கு தலைமேல் தூக்கிச் சென்று கூடைக்காரி போல் **'அருளோ அருள்'** என்று கூறி வாரி வாரி மலிவுவிலைக்கு வழங்கிப் பார்த்துவிட்டு; இந்தியத் துணைக்கண்டத்திலும் இதனைச்சார்ந்த நாடுகளிலும் உள்ளவர்களுக்கு தாங்கள் அறிய கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இனாமாகவே வழங்கிவிட்டோம். தமமையும் புரியாமல், எம்மையும் புரியாமல் சிறுபிள்ளைத் தனமான செயல்களில் ஈடுபட்டு வீணாகிக் கொண்டிருக்கும் அருளுலக மாணாக்கர்களை எண்ணி வருந்துகிறோம்.

உலக மதங்களுக்கெல்லாம் மூலமாகவும், தாயாகவும் இருப்பது இந்துமதமே. இந்துமதத்து -க்கு மூலமாகவும் தாயாகவும் இருப்பது தமிழினமே. எனவே தான் நமது இனமக்களான தமிழர் -களை அருளுலகத் தலைவர்களாக உருவாக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளோம் யாம். ஆனால், நம்மவர்கள் ஊசலாட்டம் மிகுதியாக உடையவர்களாக இருக்கிறார்கள். இதனால் இவர் கள் சில அடிகள் முன்னோக்கி நடந்த உடனேயே பயந்து பல அடிகள் பின்னோக்கி நடந்து விடுகிறார்கள்

அதாவது எல்லா மதவாதிகளையும் போல நமதுஇயக்கச் செயல் திட்டங்கள் வெறும் பொழுதுபோக்குக்குரியன வைகளாகவோ குறுகிய வட்டாரத்தார்களுக்கு மட்டுமே பயனளிக் கக்கூடியவைகளாகவோ, ஆரிய வேதநெறிக்கு அடிமைப் பட்டதாகவோ இல்லை என்பதனால் தான் குருட்டு மதவாதிகளும், தன்னலவெறியர்களும் சந்தர்ப்ப வாதிகளும் விலகிச்செல்கின் றனர். எனவே களைகள் களைவதைப் பற்றி கவலையடைய வேண்டாம்.

அன்பு

**ஞானகுரு சித்தர் கருவூரார்**

# வணக்கவுரை

இவ்விதழின் இறுதிப்பக்கத்தில் உங்களைச் சந்திக்கின்றேன்! ஆம்! நமது இந்த மாத இதழ் சில மாற்றங்களைப் பெற்று உயர்வான பல செய்திகளைத் தாங்கி வந்துள்ளது. பக்கங்களைக் கூட்ட வேண்டும்! பதிவு செய்ய வேண்டும்! பார்க்குமிடமெல்லாம் நமது ''குருதேவர்'' அறிக்கை விற்க வேண்டும்! என்ற உங்களின் எண்ணங்கள் விரைவில் நிறைவேறப் போகின்றன.

நாம் இவ்வறிக்கையின் மூலம் மட்டுமின்றி பல்வேறு வகையிலும் நமது இயக்கத்தின் கருத்துக்களை வெளிபடுத்தி வருகின்றோம் அதாவது பெரும் பொருட் செலவில் ஆயிரக் கணககில் சிறு நூல்கள், அறிக்கைகள், அறிவிக்கைகள்......... அச்சிட்டு அனைத்துத்துறைத் தலைவர்களுக்கு மட்டுமின்றி; பொது மக்களுக்கும் நேரடியாக வழங்கி வருகிறோம். அது மட்டுமல்லாது. நமது இயக்கத் தலைவரும் குருதேவருமான 'இந்துமதத் தந்தை ஞாலகுரு சித்தர் கருவூரர்' பன்முறை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு ''அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் மூலம் நேரடியாகப் பயிற்சிகளையும்; அருளுரைகளையும் வழங்கி வருகின்றார் இந்த அரும்பெரும் முயற்சிகள் உரிய உடனடி பயன்-பலனளிக்கின்றதா? என்ற வினாவை எழுப்பாமல் நமது பொருளாதார நிலையையும் மீறி செயலாற்றி வருகின்றோம். -இதை அனைவரும் உணர்ந்து உரிய முறையில் நமது இயககத்தை வளர்க்க முன்வரவேண்டும்.

மேலும் நமக்குத் தேவையான அடியார் திருக்கூட்டம் சேர்ந்து விட்டது. இவர்களுக்கு ஏட்டறிவும் பட்டறிவும் கூட குறிப்பிட்ட அளவுக்கு மேல் வழங்கப்பட்டுவிட்டது. இப்போதைய தேவையெல்லாம் முறையான பயிற்சி வழங்கலே ஆகும் Without Trianing no Attempt of Riddemption முறையான பயிற்ச்சிகள் இல்லாமல் முயற்சிகள் பலனளிக்காது. எனவே, அருட்பட்டம் பெற்ற சன்னிதானங்கள் தாங்கள் பெற்றுள்ள அருட் சத்தியை மக்களுக்கு வழங்க முன்வரவேண்டும் வாரம் ஒருநாள் ஒய்வு உள்ளபோது மந்திரிக்கவும் அருள் வழங்கவும் துவங்க வேண்டும். நமது இயக்கக் கொள்கைகளையும் தத்தமது அனுபவங்களையும் 'எடுத்துரைக்க வேண்டும்.

நமது அறிக்கையின் ஆண்டு மலர் பற்றிய ஐயம் எழுந்திருக்கலாம்! ஆண்டுக்கொரு முறை நமது அடியான்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் வைகாசி பால் குடப் பெருவிழாவில் நமது அறிக்கையின் ஆண்டு மலர் வெளியிடப்படும். ஏராளமான பக்கங்களையும்; அழகிய வண்ண முகப்பையும் தாங்கி வர உள்ளது. அதற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு மலரில் கட்டுரை, கவிதை, தத்தமது அனுபவங்களைத் தொகுத்து யார் வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். நமது குருதேவரின் ஒரு பக்க அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அவ்வாறு அனுப்பும் நபர்கள் தங்களின் புகைப்படம் வைத்து அனுப்ப வேண்டும் புகைப்படத்துடன் அவர்களின் படைப்புக்களும் வெளிவரும் என்பதால் காணிக்கைத் தொகையாக ரூ 50/- தலைமைப் பொறுப்பாளராகிய எமக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். மேலும், சிறப்பு மலரின் இரண்டு பிரதிகள் அவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

நமது குருதேவர் அறிக்கையை தாங்களே முன்வந்து விற்று தர வேண்டும் குறிப்பாக மதுரையிலிருக்கும் நண்பர்கள் தனிபிரதிகளை பல நூறை தம்பொறுப்பில் வரவழைத்து நேரடியாக விற்க வேண்டும். அதற்குரிய சன்மானம் வழங்கப்படும்.

இப்படியெல்லாம் நமது கொள்கைகளை மக்கள் மத்தியில் பரவவைப்பதின் மூலம்தான் நமது இலக்கான ''சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை' அடைய முடியும்.

அனைவரும் சிந்திப்போம்! செயலாற்றுவோம்.

—சி. கவிக்குமார்

இராசராச சோழன் சிலையைப் பற்றிய தவருன கருத்துக்களுக்கு விளக்கம் அடுத்த இதழில்

நமது செயற்குழு உறுப்பினர்கள் 23—3—85 அன்று பொன்னேரியில் தி. க. தலைவர் வீரமணியைச் சந்தித்து பேட்டி காண உள்ளனர்.

தொடர்பு: தலைமைப் பொறுப்பாளர் சி. கவிக்குமார்
56, N G O காலனி, பொன்னேரி-601204

KVS பிரிண்டர்ஸ் தேரடி, பொன்னேரி.